திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 05.04.2026

## தோல்வி என்பது வெற்றியின் ஒரு பகுதி..!

ஒவ்வொரு மாணவ மாணவியரும் படிக்க வேண்டிய வாழ்க்கைப் பாடம்.

(யூ டியூபில் வந்த காணொளி செய்தி இது. மாணவ மாணவியரின் நலன் கருதி இங்கே பகிரப்பட்டுள்ளது.)

சாதனையாளர்களின் வெற்றிகள் மட்டுமே பெரும்பாலும் பேசப்படுகின்றன. ஆனால், பெரிதும் பேசப்படாத அவர்களின் தோல்விகள்தான் அவர்களை வெற்றியாளர்களாக உயர்த்தி, சாதனையாளர்களாக நிலை நிறுத்தி உள்ளது என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

அப்படிப்பட்ட வெற்றியாளர் ஒருவர் தன்னுடைய வாழ்வில் சந்தித்த தோல்விகளைப் பட்டியலிடும் ஒரு பகுதிதான் இது :

தன்னுடைய முதல் தோல்வியாக அவர் சொன்னது, நான்காம் வகுப்பில் இந்தி மொழிப்பாடத் தேர்வில் தான் அடைந்த தோல்விதான் அது. தேர்வில் தோல்வியடைந்த பிறகு அந்த ஆசிரியரையே சந்திக்க தயங்கிய அவர், பின்னாளில் இந்தி மொழியில் இருந்த அனைத்து நிலைத் தேர்வுகளையும் எழுதி தேர்ச்சி பெற்றார்.

அடுத்ததாக அந்த நபர் பதிவு செய்தது தன்னுடைய இளைய சகோதரரிடம் தான் சந்தித்த தொடர் தோல்விகள்.
கல்வியில் சிறந்து விளங்கிய அந்த நபர், விளையாட்டுகளில் சிறந்து விளங்கிய தன்னுடைய இளைய சகோதரரிடம் அனைத்து விதமான விளையாட்டுகளிலும் தோல்வியையே சந்தித்தார்.

பின்னர், அவருக்கு கிட்டார் இசைக்கருவி வாசிக்க வேண்டும் என்ற ஆசை தோன்றியது. ஆனால், அதில் தொடர்ச்சியான ஈடுபாடு இல்லாத காரணத்தினால் இசைக்கருவி வாசிப்பதில் தோல்வியைச் சந்தித்தார்.

அதன்பிறகு பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் பொழுது நீச்சல் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விருப்பப்பட்ட அவருக்கு , உடன்படிக்கும் நண்பன்தான் நீச்சல் கற்றுக் கொடுத்தான். அதற்காக ஒரு கிணற்றுக்கு அழைத்துச் சென்று இடுப்பிலே கயிற்றைக் கட்டிக்கொண்டு குதிக்க வைத்து நீச்சல் கற்றுக் கொடுத்தான். அங்கு ஏற்பட்ட பயம் காரணமாக நீச்சல் கற்றுக் கொள்வதை அத்தோடு நிறுத்திக் கொண்டு அதிலும் தோல்வியைச் சந்தித்தார்.

அடிப்படையில் யோகா கலையில் ஆசிரியர்களாக இருந்த அவருடைய பெற்றோர், தான் யோகா கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட பொழுது, அந்த பயிற்சிகளிலும் அவர் ஆரம்ப நாட்களில் முழுமையாக ஈடுபட்டு வெற்றியை அடைய முடியவில்லை.

கணிதப் பாடத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த அவர், தேர்வில் கவனக்குறைவு காரணமாக 10 மதிப்பெண்களை இழந்ததாகவும், அதன் காரணமாக பொறியியல் கல்லூரி செல்லும் தன்னுடைய இலக்கை அடைய முடியாமல் மாற்று வாய்ப்பாக மருத்துவம் பயிலும் வாய்ப்பை பெற்றார்.

படிப்பு முடிந்த பிறகு தங்கப் பதக்கத்திற்கு உண்டான தேர்வுகளில், ஒரு மதிப்பெண் இழப்பால் தங்கப்பதக்கம் பெறுவதை பெறமுடியாமல் போன தன்னுடைய தோல்வியை பகிர்ந்து கொள்கிறார்.

அடுத்ததாக தான் சந்தித்த தோல்வியாக அவர் சொன்னது..

அன்றைய தேதியில் அந்தத் தலைப்பில் யாருமே பேசாத நிலையில், முதன்முதலாக தான் எழுதிய ஆராய்ச்சி கட்டுரை ஏற்றுக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டதுதான் அந்தத் தோல்வி. படிப்பது என்பது வேறு.. தேர்வு எழுதுவது என்பது வேறு.. ஆனால், சிந்தித்து ஆய்வு செய்து இதழ்களில் ஆய்வு கட்டுரை எழுதுவது என்பது முற்றிலும் வேறுபட்டது.
அப்படி அவர் எடுத்த முதல் முயற்சியில் சந்தித்த தோல்விதான், பின்னாளில் பல்வேறு விதமான ஆய்வு கட்டுரைகள் எழுதுவதற்கும், அவை அனைத்தும் உலகத்தரம் வாய்ந்த இதழ்களில் வெளிவருவதற்கும், அதன்பிறகு தான் பல நூல்களை இயற்றுவதற்கும் அந்த தோல்வியே அடிப்படைக் காரணமாக அமைந்தது.

கற்றுக் கொள்வதற்கும் சாதிப்பதற்கும் வயது ஒரு தடையே கிடையாது.

தன்னுடைய சிறு வயதிலே நீச்சல் கற்றுக் கொள்ள முடியாமல் தோல்வியை சந்தித்த அவர், பின்னாளில் அந்த நீச்சல் கலையைக் கற்றுக் கொண்டு ,உலக அளவில் நடைபெற்ற நீச்சல் போட்டிகளில் எல்லாம் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றதற்கும் அந்த தோல்வியே அடிப்படை காரணம்.

கிட்டார் இசைக்கருவி வாசிப்பதில் தோல்வியை சந்தித்த அவர், முறையான ஒரு பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்து அதையும் கற்றுக் கொண்டார்.

மேலாண்மை படிப்புகளில் ஆர்வம் மிகுதியாக இருந்த அவர், பின்னாளில் ஒரு புகழ்பெற்ற கல்லூரியில் சேர்ந்து தன்னுடைய துறை சார்ந்த மேலாண்மை படிப்பைப் படித்து இந்திய அளவிலே முதல் 10 நபர்களில் ஒருவராக தேர்ச்சி பெற்று சாதனை படைத்தார்.

வாழ்வில் வெற்றிகளும் மதிப்பெண்களும் முக்கியம்தான். ஆனால், மதிப்பெண்கள் மட்டுமே முக்கியம் இல்லை.

மாறிவரும் இன்றைய உலகில் ஏட்டுக்கல்வி மட்டுமே நமக்கு வாழ்வில் வெற்றியைப் பெற்று தராது. திறன்களும் மதிப்பீடுகளும் தான் நமக்கு வெற்றியைத் தேடி தரும்.

அதற்கு மிகச் சிறந்த உதாரணத்தையும் சொன்னார்.

மூங்கில் மரத்தினுடைய விதையை நட்டு வளர்த்து வந்தீர்கள் என்றால், நாம் நீர் ஊற்ற ஊற்ற ஒரு சில ஆண்டுகள் வரை அதிலே எந்த ஒரு மாற்றமோ.. வளர்ச்சியோ.. தெரியவே தெரியாது. என்ன இந்த விதை நல்ல விதை தானா? என்றுகூட நமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தலாம். ஆனால், ஒரு நான்கு ஆண்டுகள் கழித்து ஐந்தாவது ஆண்டு அல்லது திடீரென்று ஒரு ஆண்டு அது கடகடவென ஒரு எட்டு அடிகளுக்கு மேலாக வளர்ந்து விடும். இப்படி சில ஆண்டுகள் கழித்து இது மேலே வளர்கிறது என்று சொன்னால், அதுவரைக்கும் அந்த விதை தன்னுடைய வேர்களை எவ்வாறு பலப்படுத்தி இருக்கும் என்பதுதான் இங்கே நாம் சிந்திக்க வேண்டிய ஒரு விஷயம்.

அந்த மூங்கில் மரத்தின் வேர்களைப் போன்றதுதான், நாம் வளர்த்துக் கொள்ளும் திறன்களும்.. மதிப்பீடுகளும்.. நல்ல பண்புகளும்.. இவையே நம்மை அந்த மூங்கில் மரத்தைப் போல உயர்ந்து நிற்கச் செய்யும்.

அந்த மூங்கில் மரம் மிக உயரமாக வளர்ந்து நிற்கும் பொழுது, நம் கண்களுக்குத் தெரியும் அந்த மூங்கில் மரம் தான்.. நாம் காணும் மதிப்பெண்கள். ஆனால், அதனுடைய வேர்களைப் போன்றதுதான் நாம் வளர்த்துக் கொள்ளும் திறன்களும்.. மதிப்பீடுகளும்.. நல்ல பண்புகளும்.. இவையே நம்மை அந்த மூங்கில் மரத்தைப் போல பல ஆண்டுகள் நிலைத்து நிற்கச் செய்யும்

இந்த நல்ல பண்புகளும், திறன்களும் நம்முடைய பெற்றோர்களிடமிருந்து, ஆசிரியர்களிடமிருந்து, நம்மைச் சுற்றி இருக்கக் கூடியவர்களிடமிருந்து கிடைக்கக்கூடியது. இந்த நல்ல விஷயங்களை எல்லாம் நாம் தேடித்தேடி பெறுகின்ற பொழுது, முதலில் தோல்விகளைச் சந்தித்தாலும்.. பிறகு நிலையான வெற்றியை நமக்கு கொடுக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஒரு குழந்தை வெற்றியாளராக சாதிக்க வேண்டும் என்றால், முதலில் தனக்கு என்ன தேவை? தனக்கு என்ன தெரியும்? என்பதை அந்த குழந்தை தெரிந்து கொள்வதற்கு.. நாம் நல்ல வாய்ப்புகளை உருவாக்கித்தர வேண்டும். அந்த வாய்ப்புகளை குழந்தைகள் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

போட்டிகள் அல்லது தேர்வுகள் என்பது நாம் யார்? என்பதை நமக்கு உணர்த்தும் முதல் படி.

முதல் மதிப்பெண் பெறுவதும் போட்டிகளில் வெற்றி பெறுவதும் ஒருவித மகிழ்ச்சியை நமக்கு கொடுக்கலாம். ஆனால் தோல்விகள்தான் நம்மை திரும்பிப் பார்க்க வைக்கும். வாழ்க்கைக்கான பாடத்தை நமக்கு அந்த இடத்திலேயே கற்றுக் கொடுக்கும்.

மிக முக்கியமான மூன்று விஷயங்கள்..

தோல்வி என்பது தற்காலிகமானது.. அது நிரந்தரமானது அல்ல.

கற்றுக் கொள்வது என்பது.. எப்பொழுதும் தொடர்ந்து கொண்டே இருக்கக்கூடிய ஒரு செயல்பாடு. அதற்கு முடிவு என்பதே கிடையாது.

வெற்றி என்பது மிகப்பெரிய விஷயம் அல்ல.
அன்றாடம் நாம் கற்றுக் கொள்வதில்தான் வெற்றி உள்ளது.

நேற்று எப்படி இருந்தோம்.. இன்று எப்படி இருக்கிறோம்.. என்பதை பொறுத்ததுதான் அந்த வெற்றி. அதிலே ஒரு சிறிய அளவில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தால் கூட அதுவே வெற்றியாக ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு முறையும் நம்மிடம் ஏற்படும் சிறு சிறு மாற்றங்களும் முன்னேற்றங்களும்கூட சிலகாலம் கழித்து மிகப்பெரிய வெற்றியை நமக்கு பெற்றுத் தரும்.

தோல்வியைக் கண்டு பயப்படக்கூடாது. அந்த பயத்தின் காரணமாக தோல்விக்கு பிறகு முயற்சிக்காமல் இருக்கவே கூடாது.

முயற்சிகள் தவறலாம்.. முயற்சிக்க தவறக் கூடாது.